செய்தி வெளியீடு எண்: 038 நாள்:11.05.2021

# மாண்புமிகு ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள் துறை அமைச்சர் அவர்கள் மாநில அளவிலான வங்கிகளின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனை

-----------

இன்று (11.05.2021) மாலை 4.00 மணியளவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் பயன் பெறும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றம் குறித்து வங்கிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், கூடுதல் இயக்குநர்கள் மற்றும் நபார்டு வங்கி முதன்மை பொது மேலாளர் திரு. செல்வராஜ், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மாநில அளவிலான வங்கிக் கூட்டமைப்புத் தலைவர் திரு. மொகந்தா, தமிழ்நாடு கிராம வங்கி தலைவர் திரு. செல்வராஜ், பாரத வங்கியின் பொது மேலாளர் திரு. வினோத் ஜோஷ்வா, கனரா வங்கியின் பொது மேலாளர் திரு. கண்ணன், இந்தியன் வங்கியின் பொது மேலாளர் திரு. சுப்பிரமணியன், ஐ.சி.ஐ.சி.ஐ, வங்கியின் மண்டல மேலாளர் திரு. ஸ்ரீதர் ரங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் பொருளாதார ரீதியாக மேம்பாடு அடையும் வகையில் சுழல் நிதி மற்றும் கடனுதவிகள் வழங்குவது குறித்து வங்கிகளின் பிரதிநிதிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விளக்கிக் கூறினார்கள்.

மகளிருக்கான புதிய திட்டங்களை உருவாக்கி வங்கிகள் மூலம் செயல்படுத்த வங்கிகளின் ஒத்துழைப்பு வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வங்கிகளின் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார்கள். மேலும், வங்கிகளின் ஆய்வுக் கூட்டங்களை மாவட்டந்தோறும் அடிக்கடி நடத்தி மகளிர் சுய உதவிக் குழு பெண்களின் வாழ்வாதார முன்னேற்றம் குறித்த செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். வங்கிகளின் பிரதிநிதிகள் கொரோனா கால கட்டத்திலும், அதனைத் தொடர்ந்த கால கட்டங்களிலும் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு பல்வகைக் கடன்களை வழங்கி, அவர்களின் பொருளாதார முன்னேற்றத்தில் பங்கெடுப்போம் என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் உறுதியளித்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**